முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.16.03.2026

O.S No. 224/2018

பி.வா.சா.1- கெப்சிபா ஞான குளோரிட்டாள்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் MA வரை படித்துள்ளேன். வாதி தாக்கல் செய்த வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். வாதி எதன் அடிப்படையில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் என்னுடைய காம்பவுண்ட் சுவரை இடிக்க கேட்டுள்ளார். எதன் அடிப்படையில் கேட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்த ஆவணங்களை நான் படித்து பார்க்கவில்லை. நான் கட்டிய என்னுடைய காம்பவுண்ட்டை இடிக்க வாதி பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் வாதியின் பிராதை நான் சரியாக படிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் என் வழக்கறிஞருக்கு சொன்னேன். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை. அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன்.

1ம் பிரதி என் கணவர் ஆவார். நானும் என் கணவரும் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் தாமசம் என்றால் சரி. நாகர்கோவில் கிறிஸ்துநகர் யேசுவடியான் தெரு கதவு எண்.60/எ 1ல் தாமசிக்கும் லாசரஸ் யார் என்றால் லாசரஸ் செல்வின் என் கணவர் ஆவார். எங்கள் ஆவணபடி யேசுவடியான் தெரு மட்டுமே. அஞ்சலக முகவரியாக கிறிஸ்துநகரை குறிப்பிடுவார் என்றால் சரி சாட்சி தற்போது நாங்கள் கிறிஸ்துநகர் போடுவதில்லை என்றும் வெட்டுர்ணிமடம் என்று குறிப்பிடுவதாக கூறுகிறார். தேவராஜ் மகன் லாசரஸ் எனது கணவர் என்றால் சரியல்ல. லாசரஸ் என்று யாரும் கூப்பிடமாட்டார்கள். லாசரஸ்செல்வின் என்பதே முழுபெயர் ஆகும். எனது மாமனார் பெயரும் தேவராஜ் ஆகும் தேவதாஸ் இல்லை. வாதி தவறாக குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கில் இடைமனு எண்1/19 ல் ஏற்பட்ட உத்தரவின் படி தேவராஜ் மகன் லாசரஸ் என்று

திருத்தப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அது தவறான விவரம் ஆகும்.

எனது சத்தியபிராமாண வாக்குமூலத்தில் பாரா 3 ல் அவ்வாறு திருத்தி உள்ளதாக கூறிய விவரம் தவறு என்றால் சரியல்ல. லாசரஸ்செல்வின் என்று முழுமையாக திருத்தவில்லை என்று கூறியுள்ளேன். இந்த வழக்கில் இந்த நீதிமன்றத்தில் இருந்து 10, 15 முறை என் கணவர் பெயருக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரி. என் கணவர் எந்த அழைப்பாணையையாவது வாங்கி பார்த்தாரா என்றால் இல்லை பெயர் மற்றும் முகவரி தவறாக இருந்ததால் திருத்தி கொண்டுவர சொல்லி அனுப்பி விட்டோம். பல அழைப்பாணை வந்ததால் அதனை குறித்து என் கணவர் வழக்கறிஞரை அணுகி அறிவுரை பெற்றாரா என்றால் இல்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் என் கணவருக்கு அழைப்பாணை அனுப்பினாரா என்றால் ஞாபகமில்லை.

நீதிமன்ற ஆணையர் எங்கள் சொத்தை பார்வையிட வந்தாரா என்றால் இல்லை. வழக்கு சொத்தை ஆணையர் பார்வையிட வரவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டபோது நானும் என் கணவரும் எங்கள் வீட்டிற்குள் இருந்தோம் என்றால் சரியல்ல. வாதியின் விலை ஆதாரத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் படிக்காததால் அதை மறுத்து நான் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல. என் வழக்கறிஞர் ஆவணங்களை படித்து எழுதியுள்ளார். அந்த விவரங்களை நான் வழக்கறிஞருக்கு சொன்னதாக உள்ளது என்றால் சரிதான். எனக்கு 1979 ல் திருமணம் முடிந்தது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். 1961 ல் எங்கள் சொத்து காலிமனையாக அல்லது வீடுடன் கூடிய மனையா என்றால் காலிமனையாகும்.

எனக்கு 1979 ல் திருமணம் முடிந்ததால் அதற்கு முன்பே 1961 ல் என் மாமனார் கிரயம் வாங்கியபோது நான்கு எல்லைகளை அளந்து எல்கைகல்கள் ஊன்றி நிலம் வாங்கினாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல என் மாமனார் எல்கை கல்போட்ட விவரங்களை எனக்கு சொன்னார். அந்த எல்லை கற்கள் தற்போதும் ஸ்தலத்தில் உள்ளது. என் சத்தியபிராமாண வாக்குமூலத்தில் பாரா 6 ல் வாதி தாக்கல் செய்த பவர் பத்திரத்தை எதன் அடிப்படையில் செல்லாத ஆவணம் என்று சொல்கிறேன் என்றால் 5 அல்லது 6 வருடங்களுக்கு மேல் அந்த பவர்தாரர் தாவா சொத்திற்கு அருகில் இருந்தது இல்லை அவருக்கு அதற்கு முன்பு நடந்த விவரங்கள் அனைத்தும் தெரிந்ததாக சொல்லியிருக்கும் விவரம் பொய்யானது அதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன். மேற்படி காரணங்களை என் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி.

நான் இந்த வழக்கிற்காக தவறான காரணத்தை சொல்லி பவர் பத்திரத்தை செல்லாது என கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2025 ல் நவம்பர் , டிசம்பர் மாதத்தில் வாதி பட்டிகை சொத்து வீட்டில் இருந்த விவரம் தெரியுமா என்றால் சரியல்ல வாடகைதாரர் மட்டுமே குடியிருந்து வருகிறார். வாடகைதாரர் குடியிருக்கும்போது வாதி குடியிருக்க முடியாது. பவர் பத்திரம் எழுதியபோது வாதி USA ல் இருந்ததாகவும் இங்கு வரவில்லை என்று என் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்ன என்றால் எனக்கு தெரியாது. நான் முதுகலை பட்டதாரி என்பதால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் விவரங்களை தெரிந்து கொண்டே தெரியாது என்று வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5 வருடத்திற்கு முன்பு பவர்தாரர் குடியில்லை என்பதால் மட்டும் பவர்பத்திரத்தை செல்லாது என்ற காரணத்தை தவிர வேறு காரணங்கள் ஏதாவது வாக்குமூலத்தில் சொல்லி

இருந்தால் அது தவறானவை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் காம்பவுண்ட் சுவர் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. சாட்சி தற்போது ஆவணத்தை படித்து பார்த்து விட்டு அது  கிரய ஆவணம் என்றும் 1962 ல் அனுமதி பெற்று வீடு கட்டியதாகவும் கூறுகிறார். 1962 ல் அனுமதி பெற்று வீடு கட்டியதாக  இந்த வழக்கிற்காக பொய்யாக  சொல்கிறேன் என்றாலும் 1962 ல் என்னுடைய சொத்தில் எந்த வீடும் காம்பவுண்ட் சுவரும் கட்டபடவில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் கணவருக்கு என் மாமனார் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் மாமனாருக்கு இருந்த உரிமைகள் அனைத்தையும் என் கணவருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல 4 சென்ட் மட்டுமே எழுதி கொடுத்தார். என் மாமனாருக்கு உரிமையான சொத்தின் மொத்த பரப்பளவு 7 சென்ட் ஆகும். என் கணவருக்கு எந்த பக்கத்தில் 4 சென்ட் கொடுக்கபட்டது என்றால் எனக்கு திசை தெரியாது.

4 சென்ட் சொத்தின் மேற்கே யார் சொத்து என்றால் என் மாமனாருக்கு கிரயம் கொடுத்த நபரின் மீதி சொத்து உள்ளது. தெற்கு பக்கம் என் மாமனாரின் மூத்த மகன் சொத்தாகும். என் கணவருக்கும் அவரது அண்ணனுக்கும் சொத்து பிரித்து எழுதியபோது மொத்த சொத்தையும் அளந்து கல்வைத்தோமா என்றால் வைத்தோம். என் எதிர்வழக்குரை பாரா 14 ல் உள்ள விவரம் சரிதானா என்றால் தற்போது ஞாபகமில்லை. சாட்சி படித்து பார்த்துவிட்டு சரி என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் காம்பவுண்ட் சுவர் எழுதி கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதில் சங்கிலி சுவர் என்று கேட்டதால் செங்கல் கட்டிட காம்பவுண்ட்டை சொல்லவில்லை.

சங்கிலி சுவர் இல்லை என்றும் செங்கலால் கட்டப்பட்ட காம்பவுண்ட் சுவர் என்று நாங்கள் குறிப்பிட்டுள்ளோமா என்றால் அதில் இடம் இல்லை அதனால் எழுதவில்லை.

கேட்ட கேள்விகளுக்கு மட்டுமே சரியான பதில் எழுதப்பட்டுள்ளது. என் மாமனார் காம்பவுண்ட் சுவர் கட்டாததால் அதில் சொல்லபடவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்பாது மாற்றி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி 2006 ல் வழக்குபட்டிகை சொத்தை விலைக்கு வாங்கினார். எனது எதிர்வழக்குரையில் பாரா 9 ல் கடைசி வரியில் நான் சொல்லிய விவரம் சரியா என்றால் சரியல்ல. அதில் சொல்லிய விவரம் தவறாகும். நான் இந்த வழக்கிற்காக பொய்யான வாதம் செய்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் வடக்கு பக்கமுள்ள கற்களை எனது கணவரும் அவரது சகோதரரும் சொத்துக்களை பிரித்தபோது போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அந்த கற்கள் வழக்கு பட்டிகை சொத்தின் தென்மேற்கு மூலையில் உள்ளது என்றால் சரி.

வாதியின் சொத்தை நான் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. அதனால் கிடப்பு படி வாதிக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரீசர்வே பிளானை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்ததில்லை. வாதிக்கு ஆவணத்தின் படி 6 சென்ட் இருந்தாலும் ரீசர்வே பிளான் படி 6.04 சென்ட் உள்ளது என்றால் சரியல்ல. எங்களுடைய சொத்தில் கிடப்பு படி 7 சென்ட் உள்ளது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிடப்பை விட குறைவாக உள்ளதாக குறிப்பிட்டுள்ள விவரம் தவறானது என்றால் சரியல்ல. ரோட்டிற்கு 10 அடி கொடுத்துள்ளோம் அதனால் குறைவாகவே இருக்கும்.

இந்த வழக்கின் எந்த விவரமும் தெரியாமல் பொய்யான தர்க்கம் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2012 ல் எங்கள் சொத்தில் காம்பவுண்ட் சுவர் இல்லாததால் தான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் ச ரியல்ல.

பி.வா.சா.ஆ.2 ஆவணம் எழுதியபோது எங்கள் வீடு ஓட்டு வீடு ஆகும். அந்த ஓட்டு வீடு 7 சென்ட் முழுமைக்கும் இருந்தது. அந்த ஓட்டு வீடை 2017 இறுதியில் இடித்தோம். அதை தொடர்ந்து புதியதாக வீடு கட்ட ஆரம்பித்தோம். 2022 ல் கட்டி முடித்தோம். தற்போது கட்டியுள்ள வீடு கான்கிரிட் வீடு என்றால் சரி. பழைய ஓட்டு வீட்டிற்கு மாடிபடி வெளியே இருந்ததா என்றால் இருந்தது. உண்மையில் மாடிப்படியே இல்லை என்றால் சரியல்ல. ஒரு வீடு மட்டுபாவு வீடு இருந்தது என்றால் சரியல்ல.

2017 ல் இடித்து மாற்றியபோது மின்சார இணைப்பை துண்டித்து புதிய இணைப்பை பெற்றோமா என்றால் இல்லை. உண்மையில் 2018 ல் வாதியின் காம்பவுண்ட் சுவரில் படிக்கட்டும் மின்மீட்டரும் பைப் இணைப்புகளை நாங்கள் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. 2018 ல் புதிய வீடு கட்டயபோது கட்டிட அனுமதி பெற்றோமா என்றால் இல்லை பராமரிப்பு பணி என்பதால் தேவை இல்லை. நாங்கள் ஓட்டு வீடை முழுமையாக இடித்து புதிய கான்கிரிட் வீடு கட்டும்போது அனுமதி வாங்கவேண்டும் என்றால் சரியல்ல. பிராதுடன் தாக்கல் செய்த மாதிரி வரைப்படத்தை நான் பார்த்ததில்லை. பின் எவ்வாறு வாதி இரண்டு காம்பவுண்ட் சுவரை மாதிரி வரைபடத்தில் ஒப்பு கொண்டதாக என் சத்தியபிராமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வரைபடத்தை பார்க்கமாலேயே நான் சொன்னேன்.

மாதிரிவரைடத்தில் XY என்ற ஒரே காம்பவுண்ட் சுவர் மட்டுமே காட்டப்பட்டுள்ளதென்றால் சரி. நான் சொல்வது போல் பி பட்டிகை சொத்து ஒரே காம்பவுண்ட் சுவர்தான் என்றாலும் இரண்டு காம்பவுண்ட் சுவர் இல்லை என்றாலும் சரியல்ல. ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. படித்து பார்க்காததால் எனது சத்தியபிராமாண வாக்குமூலத்தில்

அடுத்தவர் தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அரசு அளவையர் உடன் ரீசர்வே பிளான் படி வழக்கு சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்தார் என்றாலும் அந்த அறிக்கையில் நான் பி பட்டிகை சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் வீடு கட்டியதற்கும் காம்பவுண்ட் சுவர் கட்டியதற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் நான் சொல்லும் விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.3 புகைப்படத்தில் உள்ள காம்பவுண்ட் சுவருக்கு வடக்கு திசையில் என் என் வீடு உள்ளது. என் வீட்டிற்கு வடக்கு பக்கம் உள்ள காம்பவுண்ட் சுவர் ஒரே சுவர் என்றால் சரியல்ல. 2 சுவர் உள்ளது. பி.வா.சா.ஆ.3 புகைப்படத்தில் முதல் புகைப்படத்தில் எங்கு 2 சுவர்கள் உள்ளது என்றால் இரு காம்பவுண்ட் சுவருக்கு இடையில் நிறங்கள் வித்தியாசம் உள்ளது அதன் விவரம் 2 வது புகைப்படத்தில் உள்ளது. உண்மையில் நான் சொல்வதுபோல் 2 காம்பவுண்ட் சுவர் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் 2 வது காட்டப்படும் காம்பவுண்ட் சுவர் என்பது காம்பவுண்ட் சுவர் இல்லை என்றாலும் மின்மீட்டர் பொருத்தப்படும் கபோர்டு என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ல் 1 வது புகைப்படத்தில் வாதியின் காம்பவுண்ட் 10 அடி உயரத்தில் கிழமேலகாக உள்ளது. என்னுடைய காம்பவுண்ட் சுவர் 3 அடி உயரம். பி.வா.சா.ஆ.3 ல் 1 வது புகைப்படத்தில் என்னுடைய 3 அடி உயர காம்பவுண்ட் சுவர் எங்கு உள்ளது என்றால் உள்ளே சென்றால் துலங்கும் புகைப்படத்தில் தெரியவில்லை.

புகைபடம் எடுத்தவரிடம் 3 அடி காம்பவுண்ட் சுவரை எடுக்க சொன்னேனா என்றால் அவர் இருந்ததை எடுத்துள்ளார். 2 வது புகைப்படம் எ பட்டிகை சொத்தின் மேற்கு

பக்கமுள்ள காம்பவுண்ட் சுவர் ஆகும். எ பட்டிகை சொத்துக்கும் பி பட்டிகை சொத்துக்கும் இடைப்பட்ட காம்பவுண்ட் சுவர் புகைப்படத்தில் துலங்குமா என்றால் துலங்காது உள்ளே சென்றால் பார்க்கமுடியும். பி.வா.சா.ஆ.3 ல் 3 வது புகைப்படத்தில் எ பட்டிகை சொத்துக்கும் பி பட்டிகை சொத்துக்கும் இடைப்பட்ட காம்பவுண்ட் சுவர் புகைப்படத்தில் துலங்குமா என்றால் துலங்காது உள்ளே சென்றால் பார்க்கமுடியும். வெளியே எடுத்ததால் உயரமான காம்பவுண்ட் தெரிகிறது 3 அடி காம்பவுண்ட் தெரியவில்லை. என் வீட்டில் இருந்து என்னுடைய 3 அடி காம்பவுண்ட் சுவரை புகைப்படம்எடுத்து தாக்கல் செய்தோமா என்றால் செய்தோம். உண்மையில் பிரச்சனைக்குரிய 3 அடி காம்பவுண்ட் சுவரை புகைபடம் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றாலும் உண்மையில் 3 அடி காம்பவுண்ட் சுவரே இல்லை என்றாலும் அதனால் தான் அதனை புகைபடம் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றாலும் நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காக மேற்கு பக்க காம்பவுண்ட் சுவரை புகைபடம் எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதி கேட்ட பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.